மத்திய நிதியமைச்சர் திரு ஜஸ்வந்த் சிங் அவர்கள் 2003–2004ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், *"மாநில அளவில் மதிப்பு கூட்டு வரியினை அறிமுகப்படுத்துவது உள்நாட்டு வர்த்தக அமைப்பில் ஒரு வரலாற்று சீர்திருத்தமாக அமையும் என்று இந்திய அரசு கருதுகிறது. முந்தைய விற்பனை அமைப்பிலிருந்து தற்போது 120க்கும் மேலான நாடுகளில் பயன்பாட்டில் உள்ள ஒரு நவீன கால உள்நாட்டு விற்பனை வரி அமைப்பிற்கு மாநிலங்கள் வெற்றிகரமாக மாறுவதற்கு இது உதவியாக அமையும்"* என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களும் வற்புறுத்தியதால், முதலாண்டில் 100 விழுக்காடுஅளவிற்கும், இரண்டாமாண்டில் 75 விழுக்காடு அளவிற்கும் மற்றும் மூன்றாம் ஆண்டு 50 விழுக்காடு அளவிற்கும் வருவாய் இழப்பை ஈடு செய்வதற்கு மத்திய அரசு முன்வந்துள்ளது.

மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழு, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மதிப்பு கூட்டு வரியினை நடைமுறைப்படுத்துவதை கண்காணித்து வருகிறது. அதிகாரமளிக்கப்பட்ட குழு அளித்த மாதிரி மதிப்பு கூட்டு வரிச் சட்ட முன்வடிவின் அடிப்படையில், 2003ம் ஆண்டு தமிழ் நாடு மதிப்பு கூட்டுவரி சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு அது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் விதி 130ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டது. மதிப்பு கூட்டு வரி சட்ட முன் வடிவினை நமது சட்டமன்றத்தில் அறிமுகம் செய்வதற்கு மத்திய அரசு 24.3.2003 அன்று இந்திய குடியரசு தலைவரின் ஒப்புதலைப் பெற்று இவ்வரசுக்கு அனுப்பியுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் நடப்பு கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்படும்.



## 8. 2003–2004 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வரிவிகித மாற்றங்கள்

### 8.1 தமிழ்நாடு பொது விற்பனை வரி

தமிழ்நாடு பொது விற்பனை வரிவிகிதங்கள் தற்போது உள்ளவாறே மதிப்புக் கூட்டுவரி நடைமுறைக்கு வரும்வரை தொடரப்பட வேண்டும். எனினும், மதிப்புக் கூட்டு வரிக்குட்படாத சில இனங்களில் பின்வருமாறு வரிவிகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

| பொருள் | முந்தைய வரிவிகிதம் (20.3. 03 வரை) | திருத்திய வரிவிகிதம் (21.3.03 முதல்) |
|---|---|---|
| வானூர்தி கேஸ்சோலின் | **28.2%** (கூடுதல் வரி, மேல்வரி உட்பட) | **29%** |
| வானூர்தி டர்பைன் எரிபொருள் ஜெட் விமான எரிபொருள் உட்பட | **28.2%** (கூடுதல் வரி, மேல்வரி உட்பட) | **29%** |
| உயர்வேக டீசல் எண்ணெய் | **23.1%** (மேல்வரி உட்பட) | **25%** |
| இலகு டீசல் எண்ணெய் | **21.9%** (கூடுதல் வரி, மேல்வரி உட்பட) | **25%** |
| பெட்ரோல் | **29.4%** (கூடுதல் வரி, மேல்வரி உட்பட) | **30%** |
| வெள்ளை மண்ணெண்ணெய் (உயர்வகை மண்ணெண்ணெய்) | **4%** | **25%** |

9.5. குறை தீர்க்கும் குழு

வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பளிப்பதற்காக வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் குழு ஒன்று 1999–ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இக்குழுவின் தலைவராக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களும், இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

9.6. ஒருங்கிணைந்த நவீன சோதனைச் சாவடிகள் அமைத்தல்

2002–2003ஆம் ஆண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டபடி வணிகவரித்துறை, போக்குவரத்துத் துறை ஆகியவைகளின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, முதற்கட்டமாக ஒன்று அல்லது இரண்டு இடங்களில் ஒருங்கிணைந்த சோதனைச்சாவடிகள் அமைக்க அரசாணை (நிலை) எண். 60. வணிகவரித்துறை, நாள் 17.6.2002ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக ஓர் ஆலோசகரை நியமிக்க ஏல ஆவணம் மற்றும் ஏல மதிப்பாய்வு போன்றவற்றை தயாரிப்பதற்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் வணிகவரி ஆணையர் அவர்களுக்கு உதவி புரியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய அளவில் ஒரு விளம்பரம் (ஆலோசகர்களுக்கான அழைப்பு) நாளேடுகளில் 23.2.2003 அன்று செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மூலமாக வெளியிடப்பட்டது. நாளேடுகளில் வெளியிடப்பட்ட விளம்பர அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு சாலை மேம்பாடு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கருத்துரு கோரிக்கைகள் (Request for Proposal) ஆவணங்கள் 30 ஏலதாரர்களுக்கு விற்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 17.3.2003 அன்று



பூர்வாங்க ஏலக்கூட்டம் (Pre-bid Meeting) வணிகவரி ஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தமிழ்நாடு சாலை மேம்பாடு நிறுவன முதன்மை செயல் அலுவலர், வணிகவரித்துறை அலுவலர்கள் மற்றும் 17 ஏலதாரர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள் மற்றும் ஏலதாரர்கள் கோரிய தெளிவுரைகள் ஆகியவை 30 ஏலதாரர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3.4.2003அன்று மாலை 5.00 மணி வரை பெறப்பட்ட 9 தொழில் நுட்ப கருத்துருக்கள், வணிகவரித்துறை மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள், தமிழ்நாடு சாலை மேம்பாடு நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் அப்போது வந்திருந்த ஏலதாரர்களின் பிரதிநிதிகள் ஆகியோர்களின் முன்னிலையில் பிரிக்கப்பட்டன. ஏலதாரர்களின் நிதி ஆதாரக் கருத்துருக்கள், வணிகவரித் துறையின் இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

சோதனைச் சாவடிகளில் பணிபுரியும் பணியாளர்களின் பணித்திறனை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக ரூ.1.42 இலட்சம் செலவில் 70 ஒளி பிரதிபலிக்கும் பட்டைகள் மற்றும் 70 ஒளிரும் குச்சிகள் சோதனைச் சாவடிகளில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

10. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்.

வணிகர்களின் நலனுக்காகவும் அவர்களுக்கு சில குறிப்பிட்ட வகைகளில் உதவும் நோக்கத்துடனும் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 31.3.2003 அன்றைய நிலவரப்படி 40,127 உறுப்பினர்கள் உள்ளனர். இப்போது

உறுப்பினர் கட்டணமாக ரூ.250/– ஒரு முறை வசூலிக்கப்படுகிறது. 31.12.2002 வரை உறுப்பினர் கட்டணமாக மொத்தம் ரூ 71.63 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. வாரியத்தின் உறுப்பினர்களுக்கு குடும்ப நலம், கல்வி, மருத்துவம் மற்றும் விபத்து நிவாரணம் போன்றவற்றிற்கு உதவித் தொகை இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. 31.12.2002 வரை, 335 உறுப்பினர்கள் மொத்தம் ரூ. 63.71 லட்சம் உதவித் தொகையாகப் பெற்று பயனடைந்துள்ளனர்.

அரசு பங்களிப்பான ரூ. 2 கோடி இந்திய ரிசர்வ் வங்கியில் பொது வைப்புக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டது. இத்தொகையுடன் வட்டித் தொகையை சேர்த்தும் நலத் திட்டங்களுக்கு எடுக்கப்பட்ட தொகையை கழித்தும் கணக்கிட்டபின், நிகரத் தொகையாக 31.12.2002 அன்று ரிசர்வ் வங்கியில் ரூ. 2,10,41,854/–ம், பாரத ஸ்டேட் வங்கியில் ரூ.13,74,005/–ம் வாரியத்தின் கணக்கில் உள்ளது. மேலும், இதுவரையில் ரூ 35.49 இலட்சம் ஈடான மானியமாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

செ.ம. வேலுசாமி
வணிகவரித்துறை அமைச்சர்